# வாக்குமூலம்
# நீதிமன்றம் இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி
# வழக்கு எண். SC 69/2020
# வழக்கு சாட்சி PW 4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : குமரேசன் | ஜாதி | : SC |
| தந்தை பெயர் | : பாபு | தொழில் | : மேஸ்திரி |
| கிராமம் | : நரசிங்கபுரம் | சமயம் | : இந்து |
| தாலுக்கா | : வாலாஜா | வயது | : 37 |

**<u>(எதிரி ஆஜர் )</u>**

**<u>தேதி 19.07.2023</u>**

## முதல் விசாரணை

நான் நரசிங்கபுரத்தில் வசித்து வருகிறேன். நான் மேஸ்திரி வேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன தனலட்சுமி எதிரியின் மனைவி ஆவார். அவர்கள் நாங்கள் இருக்கும் தெருவில் வசித்து வருகிறார்கள். 18.09.2019ம் தேதி காலை 5 மணிக்கு எதிரியின் அண்ணன் முருகன், முருகனின் மனைவி வள்ளியம்மாள் ஆகியோர் கூச்சல் போட்டுக்கொண்டிருந்தார்கள். நான் சத்தம் கேட்டு செல்வத்தின் வீட்டினிடம் போய் பார்த்தபோது அவருடைய கூரை வீட்டில் நடு மூங்கில் கொம்பில் தனலட்சுமி புடவையால் தூக்கில் மாட்டியபடி தொங்கி கொண்டிருந்தார். புடவையின் மறுமுனை பக்கவாட்டில் உள்ள கொம்பில் கட்டியிருந்தது. அதன் பிறகு நானும் எங்கள் ஊரைச்சேர்ந்த சக்திவேல் என்பவரும் சேர்ந்து புடவையை அறுத்து தனலட்சுமியை கீழே இறக்கி படுக்கவைத்து கழுத்தில் இருந்த புடவை முடிச்சை அவிழ்த்துவிட்டோம். அதன் பிறகு ஊரில் உள்ள நபர்கள் வந்தார்கள். தனலட்சுமியின் அண்ணன் கண்ணன் என்பவருக்கு மார்கபந்து என்பவர் போன் செய்து தகவல் சொன்னார். அதன் பிறகு நான் சென்றுவிட்டேன். பிறகு பெரிய அதிகாரிகள் வந்தார்கள். கண்ணன் போலீசில் புகார் கொடுத்ததன் பேரில் பிணத்தை வாலாஜா அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பிரேத பரிசோதனை முடித்து பிணத்தை எடுத்து வந்து நரசிங்கபுரத்தில் அடக்கம்

செய்தார்கள். பிணத்தை அடக்கம் செய்த மறுநாள் 20ம் தேதி நாங்கள் எல்லோரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எதிரியிடம் என்ன நடந்தது என்று கேட்டதற்கு நான் தெரியாமல் செய்துவிட்டேன் என்று எதிரி என்னிடம் சொன்னார். நான் மறுபடியும் என்ன நடந்தது என்று கேட்டதற்கு 17.09.2019ம் தேதி எதிரி இரவு 10 மணிக்கு வீட்டிற்கு வரும் போது படுத்திருந்த எதிரியின் மனைவி தனலட்சுமியின் துணி விலகியிருந்ததாகவும் அதனை எதிரி தனலட்சுமியை எழுப்பி கேட்டதில் வாக்குவாதம் ஏற்பட்டு எதிரி கையால் தனலட்சுமியை தாக்கியதில் அவருடைய வீட்டு பீரோ கைப்பிடியின் மீது தனலட்சுமி விழுந்து அவருடைய முன் தலைப்பகுதியில் காயம் ஏற்பட்டு மயக்கம் போட்டு விழுந்துவிட்டதாகவும் அதன் பிறகு தண்ணீர் தெளித்து எழுப்ப முயன்றபோது அவர் எழும்பாததால் கூரை வீட்டின் மோட்டுகொம்பின் மீது புடவையை போட்டு இழுத்து தனலட்சுமியை கட்டி தூக்கிவிட்டதாகவும் பிறகு வேலைக்கு சென்றுவிட்டதாகவும் எதிரி என்னிடம் கூறினார். அதைகேட்ட நான் என்னிடம் சொன்னதை போல் மேல் அதிகாரியிடம் போய் சொல் என்று கூறினேன். அதன் பிறகு எதிரி அதிகாரிகளிடம் சொன்னார். அந்த அதிகாரிகளின் பதவி தெரியாது. அதன் பிறகு எதிரியை சிறைக்கு அனுப்பிவிட்டார்கள். இது சம்மந்தமாக அதிகாரிகள் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரியும் அவருடைய அண்ணன் அ.சா.3 முருகனும் எதிர் எதிர் வீட்டில் வசிக்கிறார்கள். அல்லிகுளம் கூட்ரோட்டிலிருந்து நரசிங்கபுரம் கூட்ரோடு செல்லும் சாலைக்கு வடக்கு பக்கம் அந்த சாலையில் இருந்து வடக்காக ஊருக்கு செல்லும் ரோட்டின் கிழக்கு பக்கத்தில் எதிரி மற்றும் அவருடைய அண்ணன் வீடு தனியாக உள்ளது என்றால் பக்கத்திலும் வீடு உள்ளது. என் வீட்டிற்கும் எதிரி வீட்டிற்கும் இடையே உள்ள தூரம் சுமார் 100 மீட்டர் இருக்கும். எதிரியின் அண்ணன் அ.சா.3 முருகன் வீட்டிற்கு வடக்கு பக்கத்தில் ஐயப்பன் என்பவர் வீடு உள்ளது. மேற்சொன்ன கிழக்கு மேற்கு ரோடுக்கு தெற்கு பக்கத்தில் எதிரி வீட்டில் இருந்து 60 அடி தொலைவில் சக்திவேல் குடியிருந்து

வருகிறார். நாங்கள் சென்ற போது கதவு திறந்திருந்தது. அப்போது அ.சா.2 மார்கபந்து இருந்தாரா என்றால் இல்லை. எதிரியின் வீட்டிற்கு உள்ளே நின்று நான் கையை உயர்த்தினால் அந்த வீட்டு கூரையின் மோட்டுக்கொம்பை தொடலாம். நாங்கள் மோட்டுக்கொம்பின் வழியாக போட்டு பக்கவாட்டில் உள்ள மூங்கில் பரணையில் கட்டி வைத்திருந்த புடவையை கத்தியால் அறுத்து பிணத்தை கீழே படுக்கவைத்த பிறகு கழுத்தில் இருந்த முடிச்சை அவிழ்த்தோம். அந்த கத்தி பற்றி போலீசார் எங்களிடம் கேட்கவில்லை. நாங்கள் எடுத்துகொடுக்கவில்லை. நாங்கள் காலை அங்கு 1 மணி நேரம் இருந்தோம். அதன் பிறகு போலீசார் காலை 10.30 மணிக்கு மேல் தனலட்சுமியின் அண்ணன் கண்ணன் வந்த பிறகு தான் வந்தார்கள். தனலட்சுமியின் பிணம் கண்ணன் அங்கு வரும்வரை வைக்கப்பட்டிருந்தது. போலீசார் என்னை சம்பவத்தன்று காலை 11.30 மணியளவில் விசாரித்தார்கள். அப்போது பிணத்தை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்காக ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். என்னை ஒரு ஆண் போலீசார் தான் விசாரித்தார். அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. எனக்கு என்னுடைய கல்யாணம் ஆன தேதி 24.05.2016 ஆகும். நான் 20ம் தேதி எதிரியுடன் பேசிக்கொண்டிருந்தபோது எதிரியுடன் யார் யார் இருந்தார்கள் என்ற விவரத்தை போலீசிடம் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் எதிரி மட்டும் என்னிடம் தனியாக சொன்னார். நான் முதல் விசாரணையில் எதிரி என்னிடம் சொன்னதாக சொல்லியுள்ள விவரங்கள் பற்றி எதிரி என்னிடம் சொன்னார் என்று போலீசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எதிரியிடம் பேசவில்லை என்றும் எதிரி சம்பவம் குறித்து எதுவும் சொல்லவில்லை என்றும் போலீசார் சொல்லிக்கொடுத்ததன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் சம்பவம் குறித்து சொன்னதாக சொல்லும் சங்கதிகள் அனைத்தும் பொய் என்றால் சரியல்ல. எதிரி வீட்டின் முன்பு திண்ணை கிடையாது. அதுபோல் எதிரி வீட்டின் உள்புறம் திண்ணை கிடையாது. தனலட்சுமி தன்னிச்சையாக தூக்கு மாட்டிக்கொண்டு

இறந்துவிட்டார் என்றும் நான் போலீசார் மற்றும் சாட்சி கண்ணன் தூண்டுதலின் பேரில் பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH

**வாக்குமூலம்**
**நீதிமன்றம் இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி**
**வழக்கு எண். SC 69/2020**
**வழக்கு சாட்சி PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | ஜாதி | : | SC |
| தந்தை பெயர் | : | சீனிவாசன் | தொழில் | : | மேஸ்திரி |
| கிராமம் | : | நரசிங்கபுரம் | சமயம் | : | இந்து |
| தாலுக்கா | : | வாலாஜா | வயது | : | 28 |

**(எதிரி ஆஜர் )**

**தேதி 19.07.2023**

**முதல் விசாரணை**

நான் நரசிங்கபுரத்தில் வசித்து வருகிறேன். நான் மேஸ்திரி வேலை செய்கிறேன். எதிரி என்னுடைய தம்பி. இறந்துபோன தனலட்சுமி எதிரியின் மனைவி ஆவார். நான் மேஸ்திரி வேலைக்கு சென்னைக்கு சென்றுவிடுவேன். 2 வாரம் 3 வாரத்திற்கு ஒரு முறை சொந்த ஊருக்கு வந்துவிட்டு மீண்டும் சென்னைக்கு சென்றுவிடுவேன். இன்றிலிருந்து சுமார் 2 1/2 அல்லது 3 வருடங்களுக்கு முன்பு விடியற்காலை 4.30 மணியளவில் எனது தம்பி அவருடைய குழந்தையை கொண்டு வந்து என்னிடம் கொடுத்துவிட்டு தன்னுடைய மனைவி பாத்ரூம் சென்றிருப்பதாகவும் அவள் வந்தவுடன் குழந்தையை கொடுத்துவிடு என்று சொல்லிவிட்டு சென்னைக்கு போவதாக என்னிடம் கூறிவிட்டு போய்விட்டார். நான் 1/2 மணி நேரம் குழந்தையுடன் காத்திருந்தேன். ஆனால் அவருடைய தாயார் வரவில்லை. எனவே நானும் எனது மனைவி வள்ளியம்மாளும் சேர்ந்து எனது தம்பி வீட்டின் வாசல் அருகே சென்று பார்த்தோம். மேற்படி வீட்டின் வாசல்கதவு வெளித்தாழ்ப்பாள் போட்டிருந்தது. அதை திறந்துகொண்டு உள்ளே சென்று பார்க்கலாம் என்று பார்த்தபோது அந்த கதவின் உள் தாழ்ப்பாளும் போட்டிருந்தது. அந்த வீட்டின் கதவு தகரத்தால் ஆன கதவாகும். அந்த கதவை நான் பிடித்து முதலில் இழுத்தபோது வரவில்லை. பிறகு

இழுத்து பார்த்தபோது கதவு மொத்தமாக வந்தது. நான் உள்ளே பார்த்தபோது எனது தம்பியின் மனைவி தனலட்சுமி தூக்கில் தொங்கி கொண்டிருந்தார். நான் பயந்து பெரிய ஆட்களை அழைத்து வரலாம் என்று சென்றபோது சக்திவேல், குமரேசன் ஆகியோர் பிணத்தை அவிழ்த்து இறக்கி வைத்தார்கள். போலீசார் காலை 8.00 மணிக்கு என்னை விசாரித்தார்கள். போலீசாரிடம் நான் மேலே குறிப்பிட்ட விவரங்களை சொன்னேன். போலீசார் என்னிடம் வெள்ளை பேப்பரில் கையெழுத்து போடச்சொன்னார்கள் நான் போட்டேன். அதன் பிறகு போலீசார் சென்றுவிட்டார்கள்.

**( சாட்சி தற்போது முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளுக்கு பிறகு நடந்த நிகழ்வுகளை பொறுத்த அளவில் பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலீசார் விசாரணையில் எனது தம்பி மனைவி தனலட்சுமி இறந்த விவரம் தெரிந்து அவருடைய அண்ணன் கண்ணன் என்பவர் தனலட்சுமியின் உடலை வந்து பார்த்ததாகவும் பின்னர் தனலட்சுமி இறப்பில் சந்தேகம் உள்ளது என்று இராணிப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளதாகவும் பிறகு 21.09.2019 ம் தேதி காலை நான் என் தம்பி செல்வத்தை விசாரித்தேன் என்றும் எதற்காக நீ சோகமாய் இருக்கிறாய் என்று கேட்டதாகவும் அதற்கு அவன் நான் தப்பு பண்ணிட்டேன் என் கூட 2 1/2 வருடம் வாழ்ந்த என் மனைவி தனலட்சுமி என் கையாலே அடித்தேன் அப்போது அவர் பக்கத்தில் இருந்த பீரோவின் மீது விழுந்து அதன் கைப்பிடி நெற்றி பொட்டில் பட்டு கீழே அடுக்கி வைத்திருந்த செங்கல் மீது விழுந்ததில் அவர் இறந்துவிட்டார் என்று என்னிடம் எனது தம்பி சொன்னார் என்றும் அதன் பிறகு என் தம்பியை சமாதானம் செய்து வா நாம் சென்று சப் கலெக்டரிடம் சொல்லலாம் என்றும் என் தம்பி செல்வம் சப் கலெக்டர் முன்பு ஆஜர் ஆகி தனலட்சுமி அவளாக தூக்குபோட்டு இறக்கவில்லை என்றும் என் தம்பி குடிபோதையில் தனலட்சுமியை அடித்து

கொலை செய்து தனலட்சுமியே தூக்கு மாட்டிக்கொண்டது போல் ஜோடனை செய்ததாக 21.09.2019 ம் தேதி ஒப்புக்கொண்டார் என்றும் அதன் பிறகு 22.09.2019 ம் தேதி காலை 7 மணிக்கு போலீசார் என் தம்பி செல்வம் வீட்டிற்கு வந்ததாகவும் நானும் என் மனைவி வள்ளியம்மாளும் அங்கு சென்றோம் என்றும் இராணிப்பேட்டை காவல் ஆய்வாளர் என் தம்பி செல்வத்தை விசாரிக்க அன்று நடந்த சம்பவத்தை அப்படியே சொன்னான் என்றும் தன் மனைவி தனலட்சுமி 17.09.2019 ம் தேதி இரவு சுமார் 11.30 மணிக்கு தனலட்சுமி தூங்கி கொண்டிருந்தபோது அவள் துணி விலகியிருந்ததை எழுப்பி கேட்டபோது இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு என் தம்பி செல்வம் தனலட்சுமியை கையால் அடித்ததில் அவர் நிலைதடுமாறி பீரோவின் மீது விழுந்தபோது பீரோவின் கைப்பிடி தனலட்சுமியின் நெற்றிபொட்டில் பட்டு அவர் அப்படியே கீழே அடுக்கிவைத்திருந்த செங்கல் மீது விழுந்து இறந்துவிட்டார் என்றும் என் தம்பி செல்வம் தான் செய்த கொலையை மறைக்க தனலட்சுமி புடவையால் தூக்கு மாட்டி கொண்டு இறந்தது போல் ஜோடனை செய்து அங்கிருந்து வேலைக்கு சென்றதாக ஒப்புக்கொண்டார் என்றும் போலீசார் விசாரணையின் போது நானும் உடனிருந்தேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரி என் தம்பி என்பதால் அவரை காப்பாற்றுவதற்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது தம்பி அவருடைய குழந்தையை என்னிடம் கொடுத்துவிட்டு சென்றபிறகு சுமார் 1/2 மணி நேரம் கழித்து எதிரி வீட்டு வாசலுக்கு சென்றேன். நான் கதவை தட்டினேன். அங்கு யாரும் குரல் கொடுக்கவில்லை. நான் வெளித்தாழ்ப்பாளை திறந்துவிட்டு இழுத்தபோது கதவு திறக்க முடியவில்லை. நான் கதவு வழியாக எட்டி பார்த்தபோது அங்கு எதிரியின் மனைவி தூக்கில் தொங்கி கொண்டிருந்ததை பார்த்தேன். கதவை பலமாக இழுத்தபோது கதவு சுவருடன் பெயர்ந்து வெளியே வந்தது. நான் உள்ளே சென்று பார்த்து கூச்சல் போட்டேன். எதிரி வீட்டுக்கு அருகில் என் வீடு தான் பக்கத்தில் உள்ளது.

அருகாமையில் எந்த வீடும் இல்லை. தனலட்சுமி எந்த வேலைக்கும் செல்வதில்லை வீட்டில் தான் இருப்பார். எதிரி சம்பாத்யத்தில் தான் குடும்பத்தை தனலட்சுமி நடத்தி வந்தார். நான் தனலட்சுமியின் பிணத்தை இறக்கும்போது அங்கு இல்லை. அந்த பிணத்தை குமரேசன், சக்திவேலும் இறக்கியுள்ளார்கள். அவர்கள் எப்படி இறக்கினார்கள் என்று எனக்கு தெரியாது. உடனடியாக சுமார் 50 பேர்கள் கூடிவிட்டார்கள். போலீசார் வந்த பிறகு தான் எங்கள் ஊர் கிராம நிர்வாக அலுவலர் வந்தார். போலீசார் காலை 8.30 மணிக்கு வந்ததாக முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன். யார் சொல்லி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. தனலட்சுமியின் அண்ணன் கண்ணன் காலை 11 மணிக்கு மேல் வந்தார். பிணத்தை மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்கு எடுத்து செல்லும் போது காலை சுமார் 9 அல்லது 9.30 மணி இருக்கும். அதன் பிறகு பிணத்தை மாலை 3 மணிக்கு மேல் கொடுத்தார்கள். எதிரியும் தனலட்சுமியும் சுமூகமாக தான் குடும்பம் நடத்தி வந்தார்கள். தனலட்சுமி இறக்கும்போது கர்ப்பமாக இருந்தார்.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH

**வாக்குமூலம்**
**நீதிமன்றம் இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி**
**வழக்கு எண். SC 69/2020**
**வழக்கு சாட்சி PW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சக்திவேல் | ஜாதி | : | SC |
| தந்தை பெயர் | : | கிருஷ்ணன் | தொழில் | : | மேஸ்திரி |
| கிராமம் | : | நரசிங்கபுரம் | சமயம் | : | இந்து |
| தாலுக்கா | : | வாலாஜா | வயது | : | 30 |

**<u>(எதிரி ஆஜர் )</u>**

**<u>தேதி 19.07.2023</u>**

**முதல் விசாரணை**

நான் நரசிங்கபுரத்தில் வசித்து வருகிறேன். நான் மேஸ்திரி வேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன தனலட்சுமி எதிரியின் மனைவி ஆவார். 18.09.2019 ம் தேதி விடியற்காலை 5 மணியளவில் எதிரி செல்வம் வீட்டினிடம் சத்தமாக இருந்தது. நான் ஓடிச்சென்று எதிரி வீட்டினிடம் பார்த்தபோது எதிரியின் அண்ணன் முருகனும் அவருடைய மனைவியும் கத்திக்கொண்டிருந்தார்கள். அங்கு எதிரிக்கும் அவருடைய மனைவிக்கும் இரவு சண்டை நடந்ததாக பேசிக்கொண்டிருந்தார்கள். நான், குமரேசன் மற்றும் முருகன் ஆகியோர் எதிரியின் ஓலை வீட்டின் உள்ளே சென்று பார்த்தபோது தனலட்சுமி தொங்கிகொண்டிருந்தார். புடவையின் ஒரு முனை கழுத்திலும், மறு முனை பக்கவாட்டில் உள்ள பரணையிலும் கட்டப்பட்டிருந்தது. குமரேசன் கத்தியால் பக்கவாட்டில் கட்டப்பட்டிருந்த புடவையை அறுத்து பிணத்தை இறக்கி குமரேசன் பிணத்தின் கழுத்தில் இருந்த முடிச்சை அவிழ்த்து பிணத்தை வீட்டின் உள்ளே வைத்துவிட்டு நாங்கள் வெளியே வந்துவிட்டோம். அப்போது நிறைய பேர் வீட்டின் அருகே கூடிவிட்டார்கள். அதன் பிறகு மார்கபந்து அங்கு வந்து தனலட்சுமியின் அண்ணன் கண்ணனுக்கு போன் செய்து அவர் வந்தார். தனலட்சுமியின் அண்ணன் கண்ணன் அங்கு வந்ததும் கதறி அழுதுவிட்டு

எதிரி தான் தன் தங்கையை கொலை செய்ததாக போலீசில் புகார் கொடுத்தார். போலீசார் வந்து பிணத்தை ஆம்புலன்சில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். பிறகு அதிகாரிகள் வந்து விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என் வீடு அல்லிகுளம் நரசிங்கபுரம் ரோட்டிற்கு தெற்குபுறத்தில் 60 அடி தொலைவில் உள்ளது. என் வீட்டிற்கு அருகில் நிறைய வீடுகள் உள்ளது. நான் எதிரி வீட்டிற்கு சென்றபிறகு தான் குமரேசன் அங்கு வந்தார். நான் சென்று 1 மணி நேரம் கழித்து மார்கபந்து அங்கு வந்தார். நான் எதிரி வீட்டிற்கு சென்றபோது கதவு திறந்திருந்தது. நான் எதிரி வீட்டிற்கு சென்றபோது சுமார் 4, 5 நபர்கள் இருந்தார்கள். நாங்கள் எதிரி வீட்டிற்கு சென்ற ஒரு சில நிமிடத்தில் குமரேசன் அங்கு வந்துவிட்டார். ஆனால் முருகன் நான் செல்லும் போதே அங்கு இருந்தார். வீட்டில் தொங்கி கொண்டிருந்த பிணத்தை இறக்கும் போது முருகன் அங்கு இருந்தார். புடவையை கத்தியால் அறுத்தோம் என்ற விவரத்தை போலீசாரிடம் சொன்னோம். நாங்கள் பயன்படுத்திய கத்தி எந்த வகையைச் சேர்ந்தது என்று போலீசிடம் சொல்லவில்லை. போலீசார் அதை எடுத்து கொடுக்கவும் எங்களிடம் சொல்லவில்லை. நான் காலை 5 மணிக்கு வந்ததிலிருந்து சம்பவ இடத்தில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் அங்கு இருக்கும் வரை கிராம நிர்வாக அலுவலர் எதிரி வீட்டிற்கு வரவில்லை. போலீசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்ற விவரத்தை என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலவில்லை. கண்ணன் எத்தனை மணிக்கு எதிரி வீட்டிற்கு வந்தார் என்று எனக்கு ஞாபகம் இல்லை. கண்ணன் வருவதற்கு முன்பு போலீசார் எதிரி வீட்டிற்கு வரவில்லை. போலீசார் வந்த பிறகு தான் ஆம்புலன்ஸ் வரவழைக்கப்பட்டது. கண்ணன் இராணிப்பேட்டை வந்து போலீசிடம் புகார் கொடுத்தார். நான் உடன் வரவில்லை. போலீசார் சம்பவத்தன்று மாலை 6 மணிக்கு விசாரித்தார்கள். என்னை ஆண் போலீசார் விசாரித்தார். போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் எனக்கு ஞாபகம்

இல்லை. நான் போலீசார் சொல்லிக்கொடுத்தன் பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

S JOHN SUNDARLAL SURESH

Digitally signed by S JOHN SUNDARLAL SURESH